# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

### தமிழ் மாநிலம்

**தேதி**:-21.11.2016

# வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

அன்பார்ந்த தோழர்களே,

தமிழக தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்து வந்த 10 ஒப்பந்த தொழிலாளர்களை அக்டோபர் 1ஆம் தேதி முதல் ஒப்பந்ததாரர் மாறி விட்டார் என்ற ஒற்றைக் காரணத்தை சொல்லி தமிழ் மாநில நிர்வாகம் பணி நீக்கம் செய்து விட்டது.

தமிழ் மாநில CGM அலுவலக BSNL ஊழியர் சங்கமும், TNTCWUவும் இணைந்து இரண்டு கட்ட போராட்டங்களை நடத்தினர். பின்னர் தமிழ் மாநில சங்கங்கள் இந்த பிரச்சனையை கையில் எடுத்து அறைகூவல் விட்டதின் அடிப்படையில் அக்டோபர் 7ஆம் தேதி தமிழகத்தின் அனைத்து கிளைகளிலும் சக்தி வாய்ந்த ஆர்பாட்டத்தை நடைபெற்றது. அக்டோபர் 25ம் தேதி அனைத்து மாவட்ட தலைநகர்களிலும், மாலை நேர தர்ணா நடைபெற்றது. அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட 10 ஒப்பந்த தொழிலாளர்களும், மாநில சங்க நிர்வாகிகளும், CGM மாவட்ட சங்க நிர்வாகிகளும் பங்கேற்ற இரண்டு நாட்கள் தொடர் உண்ணாவிரத போராட்டம் நவம்பர் 16 மற்றும் 17 தேதிகளில் நடைபெற்றது. மாநில நிர்வாகம், சென்னையில் உள்ள ALCஇடம் ஒரு புகார் கடிதம் கொடுத்ததோடு மௌனம் சாதித்து வந்தது. இதற்கிடையே தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட மாநில நிர்வாகத்தில் உள்ளவர்களிடம் பலமுறை நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் விழலுக்கு இரைத்த நீராக வீணாகிப் போனது. அதிகார மமதையிலே 10 குடும்பத்தின் பசியைப் பற்றி கவலைப்படாமல் நிர்வாகம் அமைதி காத்தது.

பொறுமைக்கு மதிப்பில்லாத காரணத்தால், பொங்கி எழுந்து போராட வாருங்கள் தோழர்களே என மாநில சங்கங்கள் அறைகூவல் விடுத்தன. நவம்பர் 18ஆம் தேதி காலை 6 மணி முதலே தமிழகம் முழுவதும் இருந்து தோழர்கள் தமிழ் மாநில தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் குவிய துவங்கினர். தோழர்களை அலுவலக வளாகத்திற்குள்ளே நுழையவே நிர்வாகம் அனுமதி மறுத்தது. காவல் துறையினை பயன்படுத்தி தடுக்க முயற்சித்தது. மாநில சங்கத்தின் தலையீட்டில் இந்த தடை அகற்றப்பட்டது. சில தோழர்கள் பலர் ஆனார்கள். பலர் பலநூறானார்கள். பின்னர் ஆயிரக்கணக்காய் மாறினார்கள். தமிழகத்தின் தென் கோடி முனையான கன்னியாகுமரி முதல் சென்னை வரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள்

பணி நீக்கத்திற்கு எதிராக குவிந்தனர். தலைமை பொதுமேலாளர் அலுவலகம் நிரம்பி வழிந்தது. ஆவேசக் குரல் ஆர்ப்பரித்தது. ஆனால் ஒரு சிறு அசம்பாவிதமும் நிகழவில்லை. பணி நீக்கத்திற்கு எதிராக போராட வேண்டும் என்ற கடமை உணர்வோடு, எந்த ஒரு தவறும் செய்துவிடக்கூடாது என்ற கண்ணியத்தோடு மாநில தலைமையில் உத்தரவுகளை கேட்டுக் கட்டுப்பாட்டுடன் இந்த போர்ப்படை செயல்பட்டது.

நிர்வாகத்திடம் எந்த ஒரு அசைவும் தெரியாத நிலையில் தமிழ் மாநில BSNLEU மற்றும் TNTCWU சங்கங்களின் அவசர செயற்குழு அங்கேயே நடைபெற்றது. நமது கோரிக்கை முழுவதும் நிறைவேறாமல் தலைமை பொதுமேலாளர் அலுவலகத்தை விட்டு செல்வதில்லை என்பது உள்ளிட்ட போராட்டங்களை வலுவாக நடத்துவது என்ற அற்புதமான முடிவினை இந்த இணைந்த மாநில செயற்குழு முடிவு செய்தது. வந்திருந்த தோழர்கள் அனைவரும் உற்சாகமாக இந்த முடிவினை நிறைவேற்ற உறுதி பூண்டனர்.

மதியம் 2.30 மணிக்கு GM(HR) பேச்சு வார்த்தை என்ற பெயரில் மீண்டும் போராட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டுகோள் விடுத்தார். ஆவேசமாக அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தை வீரியப்படுத்தும் வகையில் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவாக அடுத்த கட்ட போராட்டத்தை நிரந்தர ஊழியர்கள் நடத்தினர். BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளரும், மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா மற்றும் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலமையில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில சங்க நிர்வாகிகள், அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் முன்னணி தோழர்கள் என நூறு நிரந்தர ஊழியர்கள் தமிழக தலைமை பொது மேலாளர் அலுவலகத்தின் 7வது மாடிக்கு சென்றனர். WEBINAR நடைபெற்ற அறைக்கு முன் அமைதியாக ஆனால் உறுதியாக காத்திருந்தனர். கீழே அலுவலகம் முன்பாக திரண்டிருந்த கூட்டம் தங்கள் கோபாவேசத்தை கண்டன உரைகளாக கொட்டிக் கொண்டிருந்தனர். நமது கோரிக்கை முழுமையாக நிறைவேற வில்லை எனில் "பெருந்திரள் முறையீடு" என்கின்ற நமது போராட்டம் "பிரச்சனை தீரும் வரை காத்திருக்கும் போராட்டம்" என மாற்றுவது என்கின்ற உறுதியோடு போராட்டம் தொடர்ந்தது.

சுமார் 4 மணிக்கு துவங்கிய அந்த சத்தியாகிரகம் தொடர்ந்து நடைபெற்று வந்த சூழலில் மாலை 05.30 மணிக்கு தலைமை பொதுமேலாளரிடம் இருந்து அழைப்பு வந்தது. ஊழியர்களின் சார்பில் BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளரும், மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா மற்றும் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர். நிர்வாகத்தின் சார்பில் CGM திருமதி N.பூங்குழலி ITS, GM (HR), DGM(Admn), AGM(Admn) மற்றும் EE(Civil) ஆகியோர் பங்கேற்றனர். நமது உறுதியான கோரிக்கையினை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு பணி

நீக்கம் செய்யப்பட்ட 10 ஒப்பந்த தொழிலாளர்களையும் மீண்டும் பணிக்கு எடுக்க ஒத்துக் கொண்டது.

நமது கோரிக்கையில் முழுவெற்றி பெற்ற சூழலில், நமது வெற்றியினை தோழர் S.செல்லப்பா விண்ணதிரும் உற்சாக கோஷங்களுக்கு இடையே பெருந்திரளாய் கூடியிருந்த தோழர்கள் மத்தியில் தெரிவித்தார்.

ஒப்பந்த ஊழியர்களின் பணி நீக்கம் என்பதை தமிழகத்தில் அனுமதிக்க முடியாது என இந்த போராட்டம் நிரூபித்துள்ளது. இரண்டு மாநில சங்கங்களின் அறைகூவலை ஏற்று மாநிலம் முழுவதிலும் இருந்து பெருந்திரளாய் பங்கேற்ற ஒப்பந்த ஊழியர்களும், நிரந்தர ஊழியர்களுமே இந்த வெற்றிக்கு காரணம். அநீதி கண்டு ஆர்ப்பரித்து எழும் கோடிக்கால் பூதங்களாய் சங்கமித்த அனைவருக்கும் தமிழ் மாநில சங்கங்களின் நன்றியையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்த போராட்டத்தினை முழுமையாக கவனித்து, நமக்கு வழிகாட்டி, பிரச்சனையின் தீர்விற்கு உதவிய மத்திய சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களுக்கும் நமது நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். நமது போராட்டத்திற்கு ஆதரவாக வாழ்த்துக்களை தெரிவித்த NFTE, SNEA, AIBSNLEA, AIBDPA மற்றும் சென்னை தொலைபேசி தோழர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். காலம் தாழ்த்திய போதும் இறுதியில் இந்த பிரச்சனைக்கு தீர்வு கண்ட தமிழக தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட நிர்வாகத்திற்கும் நமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்று பட்ட போராட்டம், ஒன்றே நமது துயரோட்டும் என்ற போராட்ட வரிகளை நிதர்சனமாக்கியுள்ள இந்த போராட்டம் தமிழக தொலை தொடர்பு ஒப்பந்த ஊழியர் இயக்கத்தின் ஒரு மைல்கல் என்றால் அது மிகையாகாது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

-sd-

**C.வினோத்குமார்**
**மாநில செயலாளர்**

**A.பாபு ராதாகிருஷ்ணன்**
**மாநில செயலாளர்**